# குற்றச் சம்பவங்கள் பூஜ்யமாக இருக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றுங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

நெறிகளைப் பின்பற்றி அல்லும் பகலும் உழைத்தால், அவர்கள் போற்றப்படுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. உங்கள் கடமையை நீங்கள் செய்தால், அதற்கான பாராட்டும் பலனும் உங்களை தேடி வந்து சேரும். அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்தே நம்முடைய சென்னை காவல்துறை மிகச் சிறப்பான காவல் துறையாக இருந்து வந்தாலும்,

1970ஆம் ஆண்டு காவல்துறையை நவீனமயம் ஆக்கியவர், அந்தப் பணியை மிகச் சிறப்பாக செய்தவர் அன்றைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இதை தமிழ்நாடு காவல்துறை ஐ.ஜி.ஆக அந்தக் காலத்தில் இருந்த மரியாதைக்குரிய எப்.வி. அருள் அவர்களே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக இந்தியாவிலேயே முதல் காவல் ஆணையத்தை அமைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன் பிறகுதான், ஒன்றிய அளவில் காவல்துறையை நவீனமயமாக்கும் பணிகள் தொடங்கியது. இரண்டாவது மூன்றாவது காவல் ஆணையத்தையும் கலைஞர் அவர்கள்தான் அமைத்தார். ஐந்தாவது காவல் ஆணையத்தை சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் சி.டி. செல்வம் தலைமையில் திராவிட மாடல் அரசு அமைத்திருக்கிறது. மக்களைப் பாதுகாக்கும் காவலர்களை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை!

அந்த அடிப்படையில்தான், இந்த ஆணையத்தை அமைத்து காவலர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்து வருகிறோம். காவல்துறையை மேலும் நவீனமயமாக்கி வருகிறோம். கடந்த மூன்றாண்டு காலத்தில் காவல் துறையின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தவும், காவல் துறையை நவீனமயமாக்கவும், காவலர் நலனைப் பாதுகாக்கவும் பல்வேறு சாதனைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மகளிர் காவலர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்!**

காவல் துறையில் முதன்முதலாக மகளிரை இடம்பெறச் செய்தது தலைவர் கலைஞர் அவர்கள்தான். இன்று எனக்கு அளிக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதை கமாண்டாராக ஒரு பெண் அதிகாரி இருந்து அந்த காட்சியை நீங்கள் பார்த்தீர்கள். அது எனக்கு மிகவும் இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்கிறது. மகளிர் பொன்விழா ஆண்டான இப்போது, மகளிர் காவலர்களிடையே நீண்ட நாட்களாக இருக்கும் ஒரு கோரிக்கையை மிகுந்த மகிழ்ச்சியோடும் மனைநிறைவோடும், இந்த நிகழ்ச்சியில் அறிவிப்பாக நான் வெளியிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு ஒரு ஆண்டு மகப்பேறு விடுமுறை அளிக்கப்படுகிறது. இந்த விடுமுறை முடிந்து, அவர்கள் பணிக்கு திரும்பும்போது அவர்கள் குழந்தைகளை பராமரிப்பதில் பல சிரமங்கள் ஏற்படுவது தொடர்பாக தொடர்ந்து அவர்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

**சைபர் குற்றங்களை குறைப்பதற்கு பெண் காவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி!**

அவர்கள் கோரிக்கையை ஏற்று, மகப்பேறு விடுமுறையில் இருந்து பணிக்குத் திரும்பும் பெண் காவலர்களுக்கு, அவர்கள் பணிமூப்புக்கு விலக்களித்து, அவர்களுடைய பெற்றோர்களோ அல்லது கணவர் வீட்டைச் சார்ந்தவர்களோ வசிக்கும் மாவட்டங்களுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பணிமாறுதல் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகளை பாதிக்கும் குற்றச்செயல் பிரச்சனைகளை தீர்ப்பதில் நம்முடைய பெண்காவலர்கள் மிக முக்கிய பங்காற்றுகிறார்கள்.

**காவல் துறையை நவீனப்படுத்த இந்தியாவிலேயே முதல் காவல் ஆணையத்தை அமைத்தவர் கலைஞர்!**

எனவே, இப்படிப்பட்ட குற்றங்களை கையாளுவதில் பெண் காவலர்களின் தொழில்முறைத் திறன்களை மேலும் மேம்படுத்தும் வகையில், பெண் கடத்தல் குற்றங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான சைபர் குற்றங்களை விசாரித்து தீர்ப்பதற்கு அவர்களுக்கு சிறப்புத் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

உங்களுக்கு இருக்கும் கடமையும், பொறுப்பும் மிக மிகப் பெரியது. மக்களைக் காப்பாற்றுவது உங்கள் கடமை! மக்களை பாதுகாப்பது உங்கள் பொறுப்பு! அதை எந்தக் குறையும் இல்லாமல் நீங்கள் நிறைவேற்றி தாருங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**குற்றங்கள் நடத்தப்படுவதற்கு முன்பே தடுக்கும் துறையாக செயல்பட வேண்டும்!**

குற்றங்களை குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல், குற்றங்கள் நடப்பதற்கு முன்பே தடுக்கும் துறையாக செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். குற்றங்கள் நடக்காத மாநிலமாக போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலமாக பாலியல் குற்றம் இல்லாத மாநிலமாக நம்முடைய மாநிலம் உருவாக வேண்டும்.

குற்றங்கள் எங்கேயும் யாராலும் நடக்கக் கூடாது. மீறி நடந்தால், உடனடியாக குற்றவாளி கைது செய்யப்பட்டாக வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு விரைவாக தண்டனையை பெற்றுத் தந்தாக வேண்டும். இந்த உறுதிமொழியை நான் மட்டும் எடுத்தால் போதாது காவல்துறையின் உயரதிகாரிகள் மட்டும் எடுத்தால் போதாது ஒவ்வொரு காவலரும் எடுத்தாக வேண்டும். "என்னுடைய காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எந்த வகைப்பட்ட குற்றமும் நடக்கவில்லை நடக்க விடமாட்டேன்" என்று ஒரு காவலர் முடிவெடுத்து விட்டால் குற்றங்கள் பூஜ்ஜியத்திற்கு வந்துவிடும்.

**குற்றச் சம்பவங்களை தடுத்திட அர்ப்பணிப்புடன் பணியாற்றுங்கள்!**

மனித வளர்ச்சியின் அனைத்துக் குறியீடுகளிலும் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு குற்றச் சம்பவங்களில் பூஜ்ஜியமாக இருந்தால்தான், நமக்கெல்லாம் பெருமை. இதில் பூஜ்ஜியம் வாங்க 100 விழுக்காடு அர்ப்பணிப்புடன், அனைத்துக் காவலர்களும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டு, விருது பெற்ற அனைவரையும் பாராட்டி, மகிழ்ந்து வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

நேற்று (23.8.2024) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் காவல் துறையின் சார்பில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் பதக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சர் பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில், சிறப்பாக பணியாற்றியதற்காக பதக்கங்களை பெற்றவர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் சைதை கிழக்குப் பகுதி

## 169 அ வட்ட துணைச் செயலாளர் சொ.முருகையன் இல்ல நிகழ்ச்சி!

### மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் - எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு

சென்னை, ஆக. 24 - சைதை கிழக்குப் பகுதி 169 அ வட்டக் கழக துணைச் செயலாளர் சொ.முருகையனின் புதல்வி பாரதி முருகையனுக்கு சொந்தமான 'ஆர்.பி. மேக் ஓவர் ஸ்டுடியோ" எனும் அழகு நிலையத்தை நாளை (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு எண்.31/9, அசோக்நகர் 7-வது நிழற்சாலையில் நடைபெறும் நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளரும் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ், மேற்குப் பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்டப் பிரதிநிதி சைதை எஸ். ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், முன்னணியினர், அனைத்து அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகளும் குத்துவிளக்கேற்றி சிறப்பிக்கின்றனர்.

ராஜேஷ் பச்சையப்பன், பாரதி முருகையன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

### செ.தமிழ்வேந்தன் தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவையொட்டி

## திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் மாபெரும் கபடி போட்டி!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஆக. 24- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி 74வது வட்ட தி.மு.க. அந்தோணியம்மாள் கபடி குழு நடத்தும் மாபெரும் கபடி போட்டி (பகல் இரவு ஆட்டம்) இன்று (24.8.2024 - சனிக்கிழமை) காலை 9 மணியளவில் தொடங்கி நாளை (25.8.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி வரை பெரம்பூர், ஜமாலியா பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் தலைமை வகிக்கிறார்.

எஸ்.புஷ்பராஜ், க.ஞானசேகர் ஆகியோர் வரவேற்கின்றனர்.

டி.லோகேஷ், லயன் பி.உதயசங்கர், பெரம்பூர் ஆர்.ராஜன், பெரம்பூர் ஆர். மகேஷ், பெரம்பூர் இளவரசன், கினார் ஆறுமுகம், மா.ருத்ரமூர்த்தி, ஜி. கிருஷ்ணகுமார், எம்.எஸ். ஜெ.சாகுல், ஜமாலியா ஜமால், எஸ்.பிரபுதாஸ், எம். மிருதன், சே.மணி மாறன், சுவிட் பாபு, எப். செபஸ்டின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார், லயன் பி.தினகரன், மு.வேல்முருகன், எம்.எம்.மாறன், என். வினாய மூர்த்தி,

எம்.சாமிகண்ணு, புனிதவதி எத்திராசன், இசட். ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், நா.துலுக்காணம், பெரோஸ் கான், ஆர்.நில வழகன், மு. சரவணன், ரமணி லோகேஷ், எஸ்.தமிழ்ச் செல்வி, ச.அம்பேத் வளவன்,

தில்லை கதிரவன், அ. கோவிந்தன், எஸ்.பாண்டு ரங்கன், புல்லட் கி.ரமேஷ், த.கருணாநிதி, பி.சுகுமார், புவனவதி, வனஜா சண்முகம், அ.கருணாநிதி, ஜி.கிருஷ்ணகுமார், மா.ருத்ரமூர்த்தி, எம்.இசட். அபோய், பரிமளா சுரேஷ் பாபு, எம்.ஏ.டீக்கா, பொல்லு டி.சுரேஷ், எம். தமீம், வி.கா.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன், டி.சந்திர சேகர் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

அந்தோணியம்மாள் கபடி குழு போட்டி ஒருங்கிணைப்பாளர்கள், சி.ஆர். தோணி, டி.சந்திரகாந்தன், என்.கிருஷ்ணன், கே.பாலா, ஜோதிநகர், பி.ராமு, என். பிரகாஷ், எம்.விஜயகுமார் (எ) குட்டி, ஏ.ஆனந்த், ஜெ. ஜான்பால், விக்னேஷ்வரன், கே.அசோக் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சதுரங்க பேட்டை பகுதியில் நேற்று (23.08.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.என். கயல்விழி செல்வராஜ் தொல்குடியினர் வேளாண்மை, மேலாண்மை திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும் நலத் திட்ட உதவிகளை பார்வையிட்டார்கள். உடன் அரசு செயலாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருமதி.ஜி.லட்சுமி பிரியா, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் அரசு கூடுதல் செயலாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருமதி.ஆர்.உமா மகேஸ்வரி இயக்குநர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை எஸ்.அண்ணாதுரை ம.தொ.ப. மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார் அவர்கள் ஆகியோர் உள்ளனர்.

---

### கும்முடிப்பூண்டி - பொன்னேரி தொகுதி:

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் வாக்காளர் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை

கும்முடிப்பூண்டி, ஆக. 24 - திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக் குட்டபட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் செய்ய இந்திய தேர்தல் ஆணைய அறிவுரையின் படி 01.01.2025 என்ற நாளை தகுதி நாளாக் கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர்; சேர்த்தல், நீக்குதல் மற்றும் திருத்தம் செயதல் தொடர்பாக சிறப்பு திருத்தப்பணிகள் 20.08.2024 முதல் துவங்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

இச்சிறப்பு சுருக்க முறை திருத்த நடவடிக்கையினை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டத்தில் 06.01.2025 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிட பல்வேறு முன்திருத்த நடவடிக்கைகளுக்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, 01.01.2025ஐ தகுதியேற்பு நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த முகாம்கள் நடத்தி எதிர்வரும் 06.01.2025 ல் வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

வாக்காளர் பட்டியல் தொடர்திருத்த பணியின் முதல் நடவடிக்கையாக வாக்குச்சாவடி நிலை அலுவலகர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி மைய பகுதியில் வசித்துவரும்; அனைத்து வாக்காளர்களின் விபரங்களை ஆகஸ்ட் 20 முதல் அக்டோபர் 18 வரை வீடு வீடாக சென்று சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ள உள்ளார்கள். களஆய்வின் போது ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள மொத்த உறுப்பினர்கள் அவர்களில் எவ்வளவு பேர்

வாக்காளர்களாக பதிவு செய்துள்ளார்கள் மற்றும் ஒவ்வொரு குடும்பத்திலும் விடுப்பட்டுள்ள வாக்காளர்களை கண்டிறிந்து சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த சரிபார்ப்பு பணியானது வாக்குசாவடி நிலை அலுவலர்கள் அனைவரும் தேர்தல் ஆணையத்தால் புதியதாக அறிமுகப்படுத்தியுள்ள செயலி வழியாக (BLO App) மேற்கொள்ள உள்ளனர்.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லம் தேடி வரும் போது வாக்காள்கள் தங்களது பெயர், வயது, புகைப்படம், முகவரி திருத்தம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள தெரிவிக்கலாம். மேலும் வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்க்கவும் இறந்து போன அல்லது நிரந்தரமாக புலம் பெயர்ந்த நபர்களை இனம் கண்டு நீக்கம் செய்திடலாம்.

எனவே, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்ற தொகுதி குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், பி.எல்.ஏ2வின் நபர்கள், கழக முன்னோடிகள், கழக உடன் பிறப்புகள் என அனைவரும் அந்தந்த வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் இணைந்து உடனடியாக வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் டி.ஜெ. கோவிந்தராஜன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திமுக சார்பில் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் ஊர் தோறும் கழகக் கொடி ஏற்றுவோம் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எம்.ஏ, தலைமையில் கழக மூத்த முன்னோடி சி.நாகரத்தினம் கழக கல்வெட்டை திறந்து வைத்து கழக கொடி ஏற்றினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன், நிர்வாகிகள் ரவீந்திரநாத், திருமலை, லோகநாதன், சி.பி.முத்து, மணிமேகலை, கருணாமூர்த்தி, ரகுபதி, பாபு, சி.ஜெ.செந்தில், தண்டபாணி, தாமோதரன், பழனி, சேகர், சிரஞ்சீவி, ஜெகதீஷ், விஜயலு, குணசேகர், செங்கையா, ஆஞ்சனேய, கலில் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.